OS: 302/2018

Date: 06.07.2022

பெயர் : நீலமேகம்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>குறுக்கு விசாரணை - 1 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில்</u>

எனக்கு எழுத படிக்க தெரியும். நான் 1971ம் ஆண்டு ஆவண எண்.577ல் உள்ள பத்திரத்தில் A schedule சொத்தை பொறுத்து அதில் ஒரு பாகம் கேட்டுள்ளேன். A schedule சொத்து ராமசாமிக்குதான் பிரிந்தது. எனது தந்தை வெங்கடாசலத்திற்கு B schedule சொத்து பிரிந்தது. அதுமட்டுமல்லாமல் ராமசாமிகவுண்டருக்கு பிரிந்த பொது சராவில் உள்ள சொத்தானது எனது தந்தைக்கு ஒரு பகுதி பிரிந்தது. ராமசாமிகவுண்டரும், எனது தந்தையும் செய்துகொண்ட பாக பிரிவினை ஆவணம் நகல்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன், அசல் பாகப்பிரிவினை பத்திரம் என்னிடம்தான் உள்ளது. மேற்படி பாக ஆவணத்தில் எனது தாத்தா ராமசாமிகவுண்டருக்கு A schedule சொத்துக்கள் பிரிந்தது என்றால் சரிதான். மேற்படி பாக பிரிவினை ஆவணத்தில் ராமசாமிகவுண்டர் உயிருடன் உள்ள காலம் வரை அவருக்கு பிரிந்த சொத்துக்களை பொறுத்து எந்தவித வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என வாசகங்கள் கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது. மேற்படி பாக ஆவணத்தில் மேற்படி ராமசாமிகவுண்டர் உயிருடன் உள்ள காலம் வரை எந்த வில்லங்கமும் செய்யக்கூடாது என பாக ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும், நானாக இவ்வழக்கிற்காக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒரு வாசகத்தின் அடிப்படையில்தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ராமசாமிகவுண்டர் உயிருடன் இருக்கும்போது 1ம் பிரதிவாதி ராமாயிக்கு 40 செண்ட் நிலத்தை கிரயம் செய்துகொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல் சண்முகம் என்பவருக்கு மேற்படி ராமசாமிகவுண்டர் கிரயம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி 2 ஆவணங்களும் போலியானது என வழக்கில் கேட்டுள்ளதற்கு

என்ன காரணம் என்றால் ராமசாமிகவுண்டருக்கு விற்பனை செய்வதற்கு அதிகாரம் இல்லை. தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. B schedule எனது தந்தைக்கு பிரிந்த சொத்து இன்னும் அப்படியே உள்ளது. அசல் பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் ஆவணம் என்னால் ஒப்படைக்க முடியுமா என்றால் மேற்படி அசல் பாகப்பிரிவினை ஆவணம் வேறொரு கோவில் வழக்கில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/PW1

ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்.